

சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் (ECR), நேற்று (04.03.2025) திருவான்மியூர் முதல் அக்கரை வரை நடைபெற்று வரும் ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு களஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு கு.கோ.சத்தியபிரகாஷ், மெட்ரோ தலைமைப் பொறியாளர் ச.ஜவஹர் முத்துராஜ்,நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்துக் கொண்டனர்.



கழக தலைவர் –முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தொகுதியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன் ஏற்பாட்டில் 400 பேருக்கு அசைவ உணவை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரிஸ்ரீதர், எல்.சுந்தராஜன், பரிதிஇளம்சுருதி, பகுதி நிர்வாகிகள், ரசூல், ஜெகதீசன், கலரிமுத்து அன்னபூரணி, டி.வி.வேலு, தில்லைகுமார், வட்ட செயலாளர்கள் ஆர்.பாபு, டால்பின் ஹரி, வி.விஜயகுமார், தயாளன், பாலு,அபாய்,சேகர், ராஜதுரை, எம்.ஜி. செல்வம், எம்.ஜி.எஸ். செந்தில்குமார், நந்தகுமார், உள்ளிட்ட மாவட்ட கழக பகுதி வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





